**18. அடியெடுத்துக் கொடுத்த கதை**

சோழ மன்னனுடைய வேண்டுகோளின்படி திருத்தொண்டர் புராணத்தைச் சேக்கிழார் தில்லையில் இருந்து பாடுதற்கு எண்ணினார். பாடுதற்கான ஏற்பாடுகளையெல்லாம் அமைத்துக்கொண்டு பாடத் தொடங்கினார்.'ஒரு பெரிய நூலைத் தொடங்கியிருக்கிறோம் அதுவுந்திருத். தொண்டர்களுடைய வரலாறாக இருக்கிறது. முதற்கண் எவ்வாறு அடியெடுத்துப் பாடுவது என்றுசிறிதுநேரம் எண்ணமிட்டார். அப்பொழுது உருவிலிவாக்கொன்று விண்ணில் இருந்து, 'உலகெலாமுணர்ந்தோதற் கரியவன் என்று தொடங்குக" என்று எழுந்தது. சேக்கிழார் திருவுள மகிழ்ந்தார்.அதனையேமுதலாகக் கொண்டு பெரியபுராணத் தைப் பாடத் தொடங்கினார். ''சீருற் றசரீரி சேக்கிழார்க் காதிமொழி பூரித்துரைக்கும் புலியூரே.



(புலியூர் வெண்பா) [அடியார்க்கருளுதல்)